05.02.2026

OS No: 316/2019

பி.வா.சா. 1 - நாச்சம்மாள் க/பெ. அவையன்

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா வழக்கில் தரப்பினராக இருந்த மாணிக்கம் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. மாணிக்கம் என்பவருக்கு பிறகு அவரது மனைவி ஆராயி என்பவர் தரப்பினராக இருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கில் தற்போது வாதிகளாக உள்ள பாலசண்முகநாதன், செந்தில்குமார் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதி அவையன் என்பவர் எனது மகன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி சந்திரலேகா 1ம் பிரதிவாதி அவையனின் மனைவி என்றால் சரிதான். தாவா வழக்கானது என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் பெயர் என்ன என்றால் அவையன். எனது கணவர் உயிருடன் இருக்கிறார். எனது கணவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் விவசாயம் செய்கிறார். எங்களுக்கு 4 ஏக்கர் சொந்த நிலம் உள்ளது, அதில் விவசாயம் செய்கிறார். 4 ஏக்கர் நிலமானது எந்த ஊரில் உள்ளது என்றால் தேத்திப்பட்டியில் உள்ளது. மேற்படி தேத்திப்பட்டியில் உள்ள 4 ஏக்கர் நிலம் தவிர வேறு எதாவது பூர்விக நிலம் உள்ளதா என்றால் உள்ளது. 30 செண்டு நிலமானது கண்மாய் கரை ஓரமாக தேத்திப்பட்டியில் உள்ளது. மேற்படி சொத்து எங்களுக்கு பாத்தியம் என குறிப்பிட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளோமா என்றால் செலுத்தியுள்ளோம். எனது மகன் என்ன தொழில் செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது மருமகள் 3ம் பிரதிவாதி சந்திரலேகா என்ன தொழில் செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது, அவருடன் நான் பேசிக் கொள்வதில்லை. எனது மகன் தாவா வழக்கில் ஒரு வழக்கறிஞர் மூலமாக ஆஜராகியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் Counter claim ஆவணத்தில் உள்ள கைரேகை என்னுடையதா என்றால் நீதிமன்றத்தில் ஆஜராகி 2 கைரேகை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் கைரேகையை பார்த்து எப்படி என்னால் என்னுடையது என

சொல்ல முடியும், அதில் எழுதி உள்ள விவரமே எனக்கு படிக்க தெரியாது. எனக்கு எந்த ஆவணத்தையும் படித்து காட்டினால் மட்டுமே தெரியவரும் என்றால் சரிதான். எனது நிருபணவாக்குமூலத்தில் எத்தனை பக்கத்திற்கு கைரேகை வைத்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. எனது எதிர் கோரிக்கை பாத்தியம் குறித்து வாதிகள் என்ன பதில் கொடுத்துள்ளார்கள் என தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எத்தனை சொத்துக்களுக்கு நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் ஒரே இடத்தில் உள்ள 4 ஏக்கர் நிலத்திற்கு பரிகாரம் கேட்டுள்ளேன். மேற்படி 4 ஏக்கர் நிலத்திற்கு எத்தனை சர்வே எண் என்றால் ஒரே சர்வே எண் தான் உள்ளது. தாவா சொத்திற்கு நான்குமால் என்ன என்றால் வடக்கே ரோடு, தெற்கே கண்மாய், கிழக்கே எழுவன் வயல், மேற்கே ஒரு பெண் பெயரில் வயலும் அதற்கு அடுத்து குளம் ஒன்று உள்ளது. 4 ஏக்கர் நிலத்தில் தென்னை மரம் வைத்து காய்த்துள்ளது. மேற்படி 4 ஏக்கர் நிலத்தில் எத்தனை தென்னை மரம் உள்ளது என்றால் 300 முதல் 400 வரையிலான மரங்கள் இருக்கும். மேற்படி தென்னை மரங்களுக்கு நீர் பாய்ச்ச கிணறு உள்ளதா என்றால் போர் (ஆழ்த்துளை கிணறு) போட்டுள்ளோம். மேற்படி போர் (ஆழ்த்துளை கிணறு) எந்த வருடம் போடப்பட்டது என்றால் சுமார் 10 வருடத்திற்கு முன்பு போடப்பட்டது. மேற்படி போர் (ஆழ்த்துளை கிணறு) போடுவதற்கு எவ்வளவு செலவு செய்தேன் என்றால் 1,60,000 செலவு செய்தேன். மேற்படி போர் (ஆழ்த்துளை கிணறு) எந்த திசையில் போடப்பட்டுள்ளது என்றால் வடக்கே ரோடு ஓரமாக போடப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் உள்ள தென்னை மரங்களில் எத்தனை மாதத்திற்கு ஒரு முறை தேங்காய் பறிப்பார்கள் என்றால் 35 நாட்களுக்கு ஒரு முறை தேங்காய் பறிப்பார்கள். மேற்படி போர் (ஆழ்த்துளை கிணறு) யார் மூலமாக போடப்பட்டது என்றால் தனியார் மூலமாக போடப்பட்டது. மேற்படி தனியார் நிறுவனம் பெயர் தெரியுமா என்றால் பெயர் ஞாபகம் இல்லை, மட்டி ஊரில் உள்ளது. எனது மகன் மற்றும் அவர் மனைவி எங்குள்ளார்கள் என்றால் சிங்கம்புணரியில் உள்ளார்கள். எனது மகன் மற்றும் அவருடைய மனைவியுடன் எத்தனை வருடங்களாக பேசாமல் உள்ளேன் என்றால் 5 வருடங்களாக

பேசாமல் உள்ளேன், அதற்கு முன்னால் பேசினேன். எனது மகனுக்கு குழந்தைகள் உள்ளனவா என்றால் 1 ஆண், 1 பெண் என 2 குழந்தைகள் உள்ளனர். எனது மகனின் குழந்தைகள் படிக்கிறார்களா என்றால் பள்ளியில் படிக்கிறார்கள் எந்த வகுப்பு என்று தெரியாது. நான் குறிப்பிடும் 4 ஏக்கர் நிலமானது எங்களுக்கு எப்படி பாத்தியம் என்றால் கிரையம் வாங்கிய வகையில் பாத்தியம். மேற்படி 4 ஏக்கரை எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பெற்றோம் என்றால் அப்போதைய மதிப்பாக ரூ.45,000-க்கு கிரையம் பெற்றோம். மேற்படி கிரையம் பெற்ற எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் நினைவு இல்லை. எனது கணவர் அன்றாட கூலி வேலை பார்ப்பவர் என்றால் சரிதான். எனது கணவருக்கு ஒரு நாள் கூலி மேற்படி 4 ஏக்கர் நிலத்தில் கிரையம் பெற்ற சமயத்தில் எவ்வளவு என்றால் ரூ.150லிருந்து 200 வரை ஆகும். அந்த காலத்தில் எனக்கு அன்றாட கூலி எவ்வளவு என்றால் ரூ.75 ஆகும். நாங்கள் மேற்படி காலத்தில் வாடகை வீட்டில் இருந்தோமா சொந்த வீட்டில் இருந்தோமா என்றால் குச்சி வீடு கட்டி அதில் இருந்தோம். சிங்கம்புணரியில் செருகப்பட்டி என்ற கிராமம் உள்ளதா என்றால் தெற்கே உள்ளது. மேற்படி செருகப்பட்டிக்கும் தேத்திப்பட்டிக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3/4 மைல் தூரம் இருக்கும். மேற்படி 3/4 மைல் தூரம் நடைபயணமாக செல்ல முடியும் என்றால் சரிதான். எனது மகன் குடியிருக்கும் வீடு ஓட்டு வீடா, தார்சு வீடா, வாடகை வீடா என்றால் வாடகை வீட்டில் தான் வசிக்கிறான். எனது மகன் வீட்டிற்கு நான் 5 வருடத்திற்கு முன்பு சென்றுள்ளேனா என்றால் இல்லை. காளப்பூர் அஞ்சு கிராமத்தில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளதா என்றால் இல்லை. எனது மகன் என்ன வேலைக்கு போகிறார் என்ன கூலி வாங்குகிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது மகனின் கையெழுத்து தெரியுமா என்றால் தெரியாது. எனது மகன் தாவா சொத்தை தனக்கு பாத்தியம் என தாவா வழக்கில் கட்சி செய்கிறார் என்றால் தாவா சொத்து எனது மகனுக்கு பாத்தியம் இல்லை. 4 ஏக்கர் இடம் யாரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது என்றால் சிங்கம்புணரியில் உள்ள ஒரு பாய் வீட்டாரிடம் கிரையம் வாங்கினேன். அவர் பெயர் எனக்கு தெரியாது. நான் கிரையம்

பெற்ற சொத்திற்கான கிரையதாரர் முஸ்லீம் குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எங்களுக்கு கிரையம் கொடுத்த நபர்கள் எத்தனை பேர் என்றால் ஒருத்தர் தான் கிரையம் கொடுத்தார். நான் கிரையம் பெற்ற பத்திரம் எழுதப்பட்டதா அல்லது டைப் செய்யப்பட்டதா என்றால் எழுதப்பட்டது. எனது கிரைய தாரர் கிரைய சொத்திற்கான மூலப்பத்திரத்தை என்னிடம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். மேற்படி எனது கிரைய தாரர்களுக்கு கிரைய சொத்து எப்படி பாத்தியம் என்றால் சர்க்காரிலிருந்து அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. மேற்படி சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்ட சொத்திற்கு சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு நினைவு இல்லை. 60 வருடத்திற்கு முன்பு கொடுக்கப்பட்டது ஆகும். சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்ட சமயத்தில் அந்த இடத்தில் ஓட்டு வீடோ, தென்னை மரமோ இல்லை என்றால் சரிதான்.

வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.02.05 15:18:07 +0530